# அழிவை மட்டுமே விரும்பும் ஜனாதிபதி 'டி.பி.'

## — பி. பி. ஸி. கடும் சாடல்

(கொழும்பு)

இந்த நாட்டின் உயிரிழப்புகளையும், அழிவுகளையும், துன்பங்களையும் மட்டுமே ஏற்படுத்தக்கூடிய வழியிலேயே ஜனாதிபதி விஜேதுங்க இருக்கிறார் என பி. பி. ஸி. கடுமையாக விமர்சித்துள்ளது.

பி. பி. ஸி. மேலும் கூறுகையில், புலிகளைச் சந்திப்பதற்கான சபாநாயகரின் யாழ்ப்பாணச் செல்லும் இருந்தது. போர்க்குரலுடைய இடர்பாடுகளுடனான இந்தப் பயணத்தை ஒத்திவைத்து மாற ஜனாதிபதி ...

(6ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 18 இதழ் 49
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 31-3-1994

1993 க. பொ. த. (உ/த)

## மொத்தப் புள்ளிகள் நேற்று வெளியாகின

(கொழும்பு)

1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர் தர) பரீட்சையில், பல்கலைக்கழகப் பிரவேசத்திற்குத் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு அவர்கள் பெற்ற மொத்தப் புள்ளிகள் விபரம் நேற்று

(6-ம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சியில் முட்டுக்கட்டை

# முகமட்டின் யாழ். விஜயத்தை ஜனாதிபதி டி.பி. ஒத்திவைத்தார்

## பாதுகாப்பு சபை ஆலோசனையின் பின் முடிவு

(கொழும்பு)

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகமட் யாழ்ப்பாணத்திற்கு நாளை முதலாம் திகதி மேற்கொள்ளவிருந்த விஜயத்தை ஜனாதிபதி விஜயதுங்க ஒரு சில காரணங்களை கூறி திடீரென நேற்று ஒத்திவைத்துள்ளார்.

பிரான்சுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு 'பிளேன்' நாடு திரும்பியுள்ள சபாநாயகர் முகமட்டை பாதுகாப்பு மற்றும் பிரதான ... காரணமாக யாழ். விஜயத்தை பின்போடும்படி ஜனாதிபதி விஜயதுங்க ஆலோசனை தெரிவித்துள்ளதாக அவர் கூறினார் என்று குறிப்பிட்டார். ஜனாதிபதியின் அனுமதியுடனேயே விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை தான் நடத்தியுள்ளதாகவும்' சபாநாயகர் தெரிவித்தார். சபாநாயகரை வரவேற்க தமிழ் புலிகளும் ஏற்பாடுகளை செய்திருந்தார்கள் விடுதலைப் புலிகள் தலைவர் திரு பிரபா

(6-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் திடீர் முடிவால் சபாநாயகர் கடும் அதிர்ச்சி

(கொழும்பு)

தனது யாழ்ப்பாண விஜயத்தை ஜனாதிபதி விஜயதுங்க பிற்போட்டமை குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ள சபாநாயகர் எம். எச். முகமட் ஜனாதிபதியின் இம்முடிவு தமக்கு பெரும் அதிர்ச்சியளிப்பதாக பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி கேள்வி பதிலாக இங்கு தரப்படுகிறது.

கே: இந்தப் பயணத்தை ஒத்திப்போட்டதற்கு ஜனாதிபதி காரணம் ஏதும் கூறினாரா.

ப: தற்போதைய நிலையில் யாழ்ப்பாணத்துக்கு ஹெலிகொப்டரில் செல்ல முடியாது என்பது ஜனாதிபதியின் சொந்தக் கருத்து ஆனால் இதனை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். நான் யாழ். வரும் போது ஹெலிகொப்டர் எங்கே இறங்குவது என்பது பற்றிய விபரத்தை புலிகள் மிகத் தெளிவாக எனக்கு அனுப்பியுள்ளார்கள். ...

(6-ம் பக்கம் பார்க்க)

## தாக்குதலுக்கு முன்னோடியாக

ராணுவ தளபதி

## ஜெரி வடக்கே விஜயம்

(கொழும்பு)

வடபகுதியில் படைமுகாம்களுக்கு இராணுவ தளபதி ஜெனரல் ஜெரி டி. சில்வா மின்னல் விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

வடக்கில் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக கூறப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கான பூர்வாங்க ஏற்பாடு களை மேற்கொள்ளும் முகமாகவே இவரது விஜயம் அமையுமெனவும் இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

[6-ம் பக்கம் பார்க்க)

## 'ஏப்ரல்பூல்' தின சேஷ்டைக்கு காவல்துறை கடும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நாளை ஏப்ரல் 1ம் திகதியை 'முட்டாள் தினம்' என்று கூறிக்கொண்டு வீணர்கள், பிறரை தொல்லைக்குள்ளாக்கும் போன்ற ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபடுவோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவிருப்பதாகத் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவ, மாணவிகள், இளைஞர்கள், யுவதி

[6-ம் பக்கம் பார்க்க)

வலிகாமம் பகுதியில்

## விமான நோட்டம்; ஹெலி தாக்குதல்

(பண்டத்தரிப்பு)

நேற்றுக் காலை 8-30 மணியளவில் வலிகாமம் மேற்குப் பகுதிகளில் ஹெலிகொப்டர் ஒன்று ரோந்து சுற்றி நோட்டமிட்டுச் சென்றது. பெரிய விளான், இளவாலை பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகம்

6-ம் பக்கம் பார்க்க)

## படை முகாம்களுக்கு ரூ. 10 லட்சம் பொருள்கள்

(கொழும்பு)

ஜனசக்தி உதவி பெறுவோர் உண்டியல் நிறைந்த தருமானம் பெறுபவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள், புத்தாண்டுக்கு முன்னர் இராணுவ முகாம்களுக்கு அனுப்பி வைக்

6-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை நீக்கப்படாது?

(புதுடில்லி)

விடுதலைப் புலிகள் உட்பட சட்ட விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடும் எந்த அமைப்பின் மீதும் உள்ள தடையை நீக்கும் கேள்விக்கே இடமில்லை என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி.

(6-ம் பக்கம் பார்க்க)

தென் மாகாண முதல்வராக

## அமரசிறி தொடங்கொட இன்று பதவியேற்பு

(கொழும்பு)

தென்மாகாண சபை முதலமைச்சராக அமரசிறி தொடங்கொட இன்று காலை பதவியேற்கவுள்ளார். ஆளுநர் எம். எம். ஜயரத்ன முன்னிலையில், அவரது அலுவலகத்தில் இந்தப் பதவிப்பிரமாணம் இடம் பெற இருக்கின்றது.

அத்தோடு இன்று எச். வீ. விக்ரமசேன மற்றும் பொதுசன ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஒருவரும் அமைச்சர்களாக பதவி ஏற்கின்றனர். இன்னும்சில தினங்களில் சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும்,

(9-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வியாழக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்

**வாங்கித்த, பழைய மணிக்கூடுகளுக்கு புதியன**

நல்ல நிலையில் உள்ள வாங்கித்த மேசை, சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் உதிரிப்பாகத்திற்காக வாங்கி புதிய மணிக்கூடுகள் குறைந்த விலையில் விற்கப்படும். குறிப்பு: (உதிரிப்பாகத்திற்கான மணிக்கூடுகள் கொண்டு வருபவர்கள் அடையாள அட்டையுடன் வரவும்.) சகல றேடியோக்கள், மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிவைன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.

(ஏ-3899)

### வைத்தியம்

செங்கமாரி, (Hepatitis) குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைசுலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கழிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 181, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம். (இ-863

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



### ஒய்வு பெற்றார்

நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய திரு. சுவாம்பிள்ளை மலக்கியாஸ் 37 வருட ஆசிரிய சேவையில் இருந்து அண்மையில் ஒய்வுபெற்றார். இவர் நுவரேலியா, பேசாலை, யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராக கடமையாற்றிய பின்பு நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாசாலையில் 30 வருடங்களாக ஆசிரியராகவும் பின்பு அதிபராகவும் கடமையாற்றியவர்.

வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பெரும் சேவையாற்றிய இவர் ஒரு சிறந்த சமூகசேவையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-தி

### கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இலுப்பையடி முத்துமாரியம்மன் ஆலயத்தில் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் பிரதம சிஷ்யன் திரு. நடேசன் சிவசண்முகமூர்த்தி தொடர் இசைப் பேருரையாற்றினார். கடந்த 26ம் தேதி அன்று பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

## இராசி பலன்

**31-03-1994**

**வியாழக்கிழமை**

**(தமிழுக்கு பங்குனி 18)**

சதுர்த்தி: ப. 8.16 வரை அனுஷம்: பி. ப. 4.56 இராகுகாலம்: ந. ப. 1.42 முதல் 3.12 வரை சுபநேரம்: காலை 7.42 முதல் 9.12 வரை

மேடம்: தொழில் பலம், குழப்பப்போக்கு, மனவேதனை.

இடபம்: காரியசித்தி, வியாபாரிகள் உதவி, தானதர்மம்.

மிதுனம்: மன நிம்மதி, வெளியூர் தகவல் குடும்ப சுகம்.

கடகம்: கண்ணியம் குறைவு, தனிப்பட்ட குறை, அலைச்சல்.

(6-ம் பக்கம் பார்க்க)

## வாழ்த்துகிறோம்

இனிதாய் மகிழ்ந்து வாழி!
எங்கள் தலைவர் பேராசிரியர் அ. துரைராசா

மனமும் முகமும்
சொல்லும் செயலும்
மணியால் இசைந்த மஹாநுபவ
எங்கள் மனதில்
நெருங்கிய தலைவா
இனிதாய் மகிழ்ந்து வாழி!

எங்கள் 'துரை' யின்
உயர்வான வழியினிலே
உயர்கல்விக்கழகம்
வளர்க்க வருகின்ற
புதிய துணைவேந்தரையும்
வரவேற்கின்றோம்.

ச. க. தனேந்திரன்
தலைவர்
யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

(எ-3944)

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் பிரதம சீடன்

## நடேசன் சிவசண்முகமூர்த்தி B.A

பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பெற்றார்



வட்டுக்கோட்டை இலுப்பையடி முத்துமாரி ஆலயத்தில் தொடர் இசைப் பேருரையாற்றிய நடேசன் சிவசண்முகமூர்த்தி 26-03-94ல் கௌரவிக்கப் பெற்றார். இவர் பல விருதுகளைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு:— பிரசங்கபூஷணம், செஞ்சொற் செல்வர், இசையரசு, இசைமணி, இசைப்பேருரைச் செம்மல்
மலேசியநாடு:— கதாகாலேட்சப வாரிதி, வாகீசர் வாரிசு, சிவநேசச் செல்வர், நாவுக்கரசு.
சிங்கப்பூர் நாடு:— கிராமிய இசைப்பாடல் சக்கரவர்த்தி.

(இ-919)

# அண்ணாவிமார் கௌரவிப்பும், பரிசில் வழங்கலும்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் மரபுவழி

★ நாட்டுக்கூத்து ★ இசைமரபு நாடகங்களை

மேடையேற்றும் அண்ணாவிமார்களை

**1995ல் கௌரவித்து பரிசில் வழங்கவுள்ளது.**

° அதனோடு அன்றைய கௌரவிப்பு விழாவிலே அவர்களினால் தயாரிக்கப்பட்ட

° கூத்துக்களையும், இசைநாடகங்களையும் மேடையேற்றவுள்ளது.

**விதிகள் :**

1. நாட்டுக்கூத்துக்களிலோ, இசைமரபு நாடகங்களிலோ மேடையேற்றும் நடிகர்களில் 80/ மானோர் 25 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளாகவே இருக்கவேண்டும்.
2. நிகழ்வு 1 மணி 30 நிமிடத்திற்கு குறையாததாக இருக்கவேண்டும்.
3. 1-4-94க்கும் 31-12-94க்கும் இடைப்பட்ட காலத்தில் மேடையேற்றப்படும். கூத்துக்களும், இசை மரபு நாடகங்களும் மட்டும் அண்ணாவிமார் கௌரவிப்புக்கும், பரிசில் வழங்கலுக்கும் எடுத்துக்கொள்ளப்படும்.
4. நாட்டுக்கூத்து, இசைமரபு நாடகங்களின் வடிவங்களின் மூலம் சமகாலப் பிரச்சனைகளை வெளிக்கொணரும் (நிகழ்வுகளும்) கூத்துக்களும், நாடகங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

★ எனவே மேற்படி நிகழ்ச்சிகளை மேடையேற்றும் அண்ணாவிமார்கள் தமது நிகழ்வுகளை எமது கழகத்திற்கு அறிவிக்குமிடத்து எமது கழகத்தின் பிரதிநிதி ஒருவர் அந்நிகழ்வின் பார்வையாளராக பங்குகொண்டு அண்ணாவியாரின் பெயரையும், நாட்டுக்கூத்து, இசைமரபு நாடகத்தின் பெயரையும் பதிவு செய்துகொள்வார்.

★ எனவே இம்முயற்சியில் திறமைமிக்க, வளம்கொண்ட நெறியாளர்கள், தயாரிப்பாளர்கள், அண்ணாவிமார்கள் ஈடுபட்டு எமது பாரம்பரிய கலைவடிவத்தை இளைஞர் மட்டத்தில் வளர்க்கும்படி அன்பாய் வேண்டுகின்றோம்.

தொடர்பு முகவரி:
செ. மெற்றுஸ்மயில்,
செயலாளர்,
**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்,**
365, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

இப்படிக்கு
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்.

அன்பளிப்பு: முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு பெயர்பெற்ற ஸ்தாபனம்
**ராசி பட்டு மாளிகை — RASI SILKS**
70, 71 A, நவீன சந்தை (கஸ்தூரியார் வீதி) யாழ்ப்பாணம்.

(இ-918)

